# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 12984/SCIC/2025**

Thiru / Tmt M.V.Ramani மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
மத்திய சென்னை 600 014

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 26.06.2024 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 26.07.2024 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 03.08.2024 |
| 4. | முதல் மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 13.08.2024<br>18.09.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 04.11.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 26.06.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில், கீழ்கண்ட தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

I am the petitioner in both Writ petition 24474/17 & 29601/17. You have stated in your Counter Affidavit filed in the above writ petition that “GOVERNMENT OF TAMIL WHICH ALONE IS EMPOWERED TO APPOINT SPECIAL OFFICERS HAS IN AN EARLIER OCCASION CONSIDERED

THE PROPOSAL TO APPOINT A SPECIAL OFFICER BUT DECIDED IT IS NOT NECESSARY TO APPOINT SPECIAL OFFICER" This is related Sri Ram Samaj Society. I request you to provide me copies of your letters sent to Government decision not necessary to appoint special officer to Sriram Samaj of such communications which you have received from Govt of Tamil Nadu.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் தனது உதவியாளர் ஒருவருடன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு A. சுரேஷ்குமார், பொதுத் தகவல் அலுவலர் /மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) (பொறுப்பு), மாவட்ட பதிவாளர் அலுவலம், மத்திய சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 26.07.2024 மற்றும் 18.09.2024 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதில் மனுதாரரால் கோரப்பட்ட தகவல் Unspecific-ஆக உள்ளது என்றும், குறிப்பிட்டு தெளிவாக கோரப்படவில்லையென்றும், எனினும் மிகவும் கடினமுயற்சி மேற்கொண்டு தேடப்பட்டதாகவும், ஆயினும் அலுவலகப் பதிவுருக்களில் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை மனுதாரர் மறுத்தார்.

4. **மனுதாரர் தனது மனுவில் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலர், பதிவுத்துறைத்தலைவருக்கு 28.06.2024 தேதியிட்டு கடிதம் ஒன்றினை அனுப்பியதாகவும், அக்கடிதம் மட்டுமே தற்போது பராமரிப்பில் உள்ளது என்று தெரிவித்து, அக்கடித நகலினை ஆணையத்தின் முன் விசாரணையின்போது சமர்ப்பித்தார். அதுகுறித்து பதிவுத்துறைத்தலைவர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதம் / பதில் ஏதும் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்றும், மேலும், தங்கள் அலுவலகத்தில் தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டும் ஆவணங்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லையென்றும், அதுகுறித்து விளக்கம் ஒன்றினை பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

5. **எனவே, மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்பதைக் குறிப்பிட்டு, தெளிவான விவரங்களுடன் பொதுத் தகவல் அலுவலர் பிரமாணப்பத்திரம் ஒன்றினையும், மேலும் மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்கள் குறித்து தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ள கடித நகல்கள் / ஆவணங்கள் அனைத்தையும் 15.09.2026 தேதிக்குள் மனுதாரருக்கு விரைவுத்தபால் அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 15.09.2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12984/SCIC/2025</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
மத்திய சென்னை 600 014

**மனுதாரர்**

Thiru / Tmt Ramani,
Alankar Priyadharshini Flat -S1,
2nd Floor, Rear Wing,
Old No.42 New No. 56,
Mahadevan Street, West Mambalam,
Chennai 600 033

TK/PS